ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 1775/23 - 2012 සැප්තැම්බර් මස 15 වැනි සෙනසුරාදා - 2012.09.15
1775/23 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 15 ஆந் திகதி சனிக்கிழமை
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

## உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்

### (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 அ (2) என்னும் பிரிவின் கீழ் புத்தல பிரதேச சபையின் உறுப்பினரொருவரின் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்

இறப்பெய்தியமை காரணமாக புத்தல பிரதேச சபையின் உறுப்பினரொருவரின் பதவி வெற்றிடமாகியுள்ளதாதலாலும்;

கஹகல ஹேவாகே ஆரியசேன எனும் உறுப்பினர் சேர்ந்திருந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செயலாளர், முப்பது (30) நாட்கள் காலப்பகுதிக்குள் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு வெளிப்படுத்தப்பட வேண்டிய அக்கட்சியைச் சேர்ந்தவரும், புத்தல பிரதேச சபையின் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு கட்டளைச் சட்டத்தின் கீழ் தகுதியுடையவருமான ஆளொருவரைப் பெயர் குறிப்பதற்கு மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் 65அ (2) ஆம் பிரிவின் கீழ் என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும் ;

மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளர், அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு மேலே சொல்லப்பட்ட கட்டளைச் சட்டத்தின் கீழ் தகுதியுள்ள ஆளொருவராக திரு. ஹபராதூவ பீல்லகே சஞ்ஜீவ பிரதீப் என்பவரைப் பெயர் குறித்து நியமித்துள்ளாராதலாலும் ;

இப்போது புத்தல பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலர் சுரங்க அம்பகஹதென்னே ஆகிய நான், (262 ஆம் அத்தியாயமான ) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 அ (2) என்னும் பிரிவின் நியதிகளின்படி செயற்பட்டு திரு. ஹபராதூவ பீல்லகே சஞ்ஜீவ பிரதீப் என்பவர் புத்தல பிரதேச சபையின் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

சுரங்க அம்பகஹதென்னே,
தெரிவத்தாட்சி அலுவலர்,
புத்தல பிரதேச சபை.

தேர்தல்கள் அலுவலகம்,
மொனராகலை,
2012,ஓகத்து 20.

9 - 1265

## உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 262)

*10 அ (1) (அ) என்னும் பிரிவின் கீழான அறிவித்தல்*

### அக்குரஸ்ஸ பிரதேச சபை

*அக்குரஸ்ஸ பிரதேச சபையின் உறுப்பினரொருவரான திரு. எஸ். எல். சுனில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி கட்சியின் உறுப்பினராக இல்லாதொழிந்துள்ளதால், மேற்படி சபையின் அவரது உறுப்பினர் பதவியை அவர் இழந்துள்ளாரென அக்குரஸ்ஸ பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலர் கந்த உட ஆரச்சிகே சுனெத் லோசன ஆகிய நான், (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 10அ (1) (அ) என்னும் பிரிவின் கீழ் வெளிப்படுத்துகின்றேன்.*

*கந்த உட ஆரச்சிகே சுனெத் லோசன,*
*தெரிவத்தாட்சி அலுவலர்,*
*அக்குரஸ்ஸ பிரதேச சபை.*

*தேர்தல்கள் அலுவலகம்,*
*மாத்தறை,*
*2012, செத்தெம்பர் 4.*

*9 - 1266*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.